# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 17 புதன்கிழமை (31.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 67


# சமாதானத்தை உருவாக்காவிட்டால் சர்வதேச நிதி உதவிகளை இழப்பீர்கள்!

## கொடை வழங்கும் நாடுகள் இலங்கைக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜனவரி 31

**நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துங்கள். இல்லையேல் சர்வதேச நிதி உதவிகளை பெருமளவில் இழப்பீர்கள்.**

**-இவ்வாறு உதவும் நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இலங்கை அபிவிருத்தி தொடர்பாக சர்வதேசப் பிரதிநிதிகள் பங்குபற்றும் இரு நாள் மாநாடு நேற்று காலியில் முடிவடைந்தது.

அந்த மாநாட்டில் பங்குபற்றிய சர்வதேச பிரதிநிதிகளே மேற்படி செய்தியை அரசுத் தலைமைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தெரியப்படுத்தியிருக்கின்றனர் என செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

மேற்குலக நாடுகளின் சார்பில் மேற்படி கருத்தை அழுத்தம் திருத்தமாகக் கோடி காட்டியவர் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஒ பிளேக்.

''இந்த மோசமான பிணக்குக்கு இராணுவ வழித்தீர்வு ஏதும் இல்லை என்ற சலனப்படாத உறுதி நிலையில் நாம் தெளிவாக இருக்கின்றோம்.'' -என்று அந்த மாநாட்டில் தெளிவுபடுத்திய அவர் ''அமைதிப் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமையக்கூடிய-

(03ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமய இன்று முடிவு

கொழும்பு,ஜன.31

அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெறுவதா இல்லையா என்பது குறித்து ஜாதிக ஹெல உறுமய கட்சி இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளது.

அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப்பெறுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அக்கட்சிக்குப் பல தடவைகள் அழைப்பு விடுத்தார் என்றும் அது தொடர்பான தமது நிலைப்பாடு இன்று வெளியிடப்படும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்கவை தேசிய பட்டியலின் ஊடாக எம்.பியாக்கி அவருக்கு அமைச்சுப் பதவி ஒன்றையும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

இருப்பினும் ஜாதிக ஹெல உறுமய அரசுடன் இணைவதா இல்லையா என்று நேற்றுக் கூடி ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது. அங்கு மேற்கொள்ளப்பட்ட முடிவு இன்று அறிவிக்கப்படும்.

# கண்காணிப்புக் குழுவினர் இன்று கிளிநொச்சி விஜயம்

## ஹெலி வசதி வழங்க அரசு இணக்கம்

கொழும்பு,ஜன.31

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் இன்று கிளிநொச்சிக்குச் சென்று அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றார்.

கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொழும்பிலிருந்து கிளிநொச்சி செல்வதற்கு ஹெலிகொப்டர் வசதியை வழங்க அரசு இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் அதிகரித்திருக்கின்ற நிலையில் - இரு தரப்புகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கேள்விக்குறியாகியிருக்கின்ற சந்தர்ப்பத்தில் - கண்காணிப்புக் குழுவின் உயர்மட்டக் குழுவினர் கிளிநொச்சி செல்கின்றமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் வெளிநாட்டில் இருப்பதால் பதில் தலைவர் வன்னி செல்வதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

## வங்கிகளில் தன்னியக்க இயந்திரம் மூலமான சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன. 31

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைபேசிச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ள போதும், வங்கிகளில் தன்னியக்க இயந்திரம் (ATM) மூலம் பணம் பெறும் நடைமுறை நேற்றுச் சீரானது.

விசேட ஏற்பாட்டுடன் அந்த இயந்திரங்களை இயக்கக்கூடிய தொலைத் தொடர்பு வசதிகளை 'ரெலிகொம்' நிறுவனம் ஏற்படுத்தியது. அதனால் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் மக்கள் பணம் பெறக் கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

''சற்றலைற்'' வலைப்பின்னல் ஊடாக அத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# குடாநாட்டிலிருந்து ஆயிரம் பயணிகள் இன்று கப்பல் மூலம் திருமலைக்கு

யாழ்ப்பாணம்,ஜன.31

கப்பல் பயணத்துக்குக் காத்திருந்தவர்களில் ஆயிரம் பேர் இன்று கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு இத்தகவலைத் தெரிவித்தது.

கடந்த மாதம் 13ஆம் திகதி பயணிகள் கப்பல் சேவை நிறுத்தப்பட்டதால் பெரும் எண்ணிக்கையானோர் போக்குவரத்து வசதி இல்லாது இருந்தனர். அவர்களில் ஆயிரம் பயணிகள் நேற்று காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் இன்று திருமலைக்கு அழைத்துச் செல்லப்படுவர் - என்று தெரிவிக்கப்பட்டது.

பலாலி வானொலி மூலம் நேற்று நண்பகல் திடீரென விடுக்கப்பட்ட அறிவித்தலை அடுத்து யாழ்.சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கூடினர். அவர்களில் ஆயிரம் பேர் இன்று கப்பலில் அனுப்பப்படுகின்றனர். மிக விரைவில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்று சிவில் அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேவேளை -

கப்பல் பயண வசதி இன்றி மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய தென்னிலங்கையைச் சேர்ந்த 293 பேரும் இக் கப்பலில் அழைத்துச் செல்லப்படுவதாக அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (அ-1-8)

# 4 ஆயிரத்து 500 கோடி டொலர் இலங்கைக்குக் கிடைக்குமாம்!

கொழும்பு, ஜன.31

காலியில் நேற்றும் நேற்றுமுன்தினமும் இடம்பெற்ற 2007 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் அபிவிருத்தி மாநாட்டில் கலந்துகொண்ட கொடையாளி நாடுகளும் நிதி அமைப்புகளும் 4ஆயிரத்து 500 கோடி அமெரிக்க டொலர்களை உதவித்தொகையாக வழங்க முன்வந்திருக்கின்றன என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு வரையான இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கென இந்த நிதியை வழங்க உதவும் நாடுகள் சம்மதித்திருக்கின்றன என்று காலி மாநாடு முடிந்த பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அமுனுகம கூறினார்.

இதேவேளை, இந்த நிதியானது இலங்கை சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே வழங்கப்படும் என்று உதவும் நாடுகள் கோடி காட்டியிருக்கின்றன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சமாதானத்தை ஏற்படுத்தும் வாய்ப்பை தொலைத்துவிட்டார் மஹிந்த ராஜபக்ஷ

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜன.31

ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதற்கு ஜனாதிபதியே பொறுப்பு. இதன் மூலம் சமாதானத்தை உருவாக்க கிடைத்த வாய்ப்பை அவர் இழந்துவிட்டார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட எம்.பி.துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், ஆளும் சுதந்திரக்கட்சியும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்தது.

ஜனாதிபதியின் அமைதி முயற்சிக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல கட்சிகள் ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்களை தம் பக்கம் வளைத்துப் போடுவதற்கான தேவை அவருக்கு இருக்கவில்லை.

அமைதி முயற்சியைக் கொண்டுசெல்ல அரசிற்கு ஆதரவு வழங்கத் தயாராக இருந்த கட்சிகளின் ஒத்துழைப்பு மாத்திரமே அவருக்குப் போதுமானதாக இருந்தது.

ஆனால், அதை விட்டுவிட்டு அக்கட்சிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். அவர் நிச்சயம் யுத்தத்தை விரும்புகிறார் என்பதையே இது காட்டுகிறது.

இப்படியானதொரு ஜனாதிபதி மூலம் இனப் பிரச்சினை தீர்க்கப்படும் என்றோ தமிழர்களுக்கு விடிவு கிட்டும் என்றோ எதிர்பார்க்க முடியாது. -என்றார்.

## குடாநாட்டுப் பாடசாலைகளில் நேற்றும் மாணவர் வரவு குறைவு

யாழ்ப்பாணம்,ஜன.31

வடமராட்சிப் பாடசாலை மாணவர்களை விடுவிக்குமாறு கோரி நடத்தப்படும் பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக குடாநாட்டுப் பாடசாலைகளில் மாணவர் வரவு நேற்றும் குறைவாகவே காணப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் காரணமாக யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் நேற்றும் மாணவர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

யாழ். நகரப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு ஓரளவு இருந்ததாகப் பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர். (அ-1-8-79)

## மானிப்பாய் கிளைமோரில் காயமடைந்த மாணவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.31

கடந்த 23ஆம் திகதி மானிப்பாயில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் காயமடைந்த மாணவர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்.ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மானிப்பாயைச் சேர்ந்த கருணாகரன் டிநேசன் (வயது 17) என்ற மாணவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார்.

இவரது மரணம் குறித்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் மரண விசாரணைகளை நடத்தினார். (அ-1)

# நாடாளுமன்றில் ஜே.வி.பியினருக்கு எதிர்க்கட்சித் தரப்பில் ஆசனங்கள்

கொழும்பு, ஜன.31

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்துஅரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புகளை பெற்றவர்களுக்கு ஆசனம் வழங்கும் நோக்கில் அரச தரப்பில் அமர்ந்திருந்த 16 ஜே.வி.பி. எம்.பிக்களுக்கு எதிர்க்கட்சித் தரப்பில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற படைக்கலச் சேவிதர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த 24 எம்.பிக்கள் அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களையும் பிரதி அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டமை தெரிந்ததே.

நாடாளுமன்றத்தில் இவர்களுக்கு அரசுத் தரப்பில் ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும். இதற்கு வழிசெய்யும் முகமாக இப்போது ஆளும் கட்சித் தரப்பிலிருந்து 16 ஜே.வி.பி.எம்பிக்களுக்கு எதிர்க்கட்சித் தரப்பில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**கந்தர் செல்லத்துரை**
திதி : பூர்வபக்க திரயோதசி

பிறப்பு 09.03.1920 இறப்பு 01.01.2007

எமது ஆலமரமே
எம்மைத் தவிக்கவிட்டுப்
போனதுண்டோ?

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (31.01.2007) புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரை யும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆசிரியமணி ஆறுமுகம் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (57620) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள MP xxx ஸ்கூட்டிப் பெப், றொபின் 1200 w ஜெனரேட்டர், P3 Lap top, புதிய மைக்றோ வேவ் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 6020624

## விற்பனைக்கு

கண்டி, ஹற்றன் ஆகிய பகுதிகளில் வீடு, காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
எஸ்.எஸ்.குமார்
தொ.பே.:
0776938823

## பகிரங்க ஏல விற்பனை

சங்குவேலி தெற்கு, மானிப்பாய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் நிற்கும், பாரிய மகோற்கனி மரம் ஒன்று எதிர்வரும் 04.02.2007 ஞாயிற்றுக்கிமை காலை 10 மணியளவில் ஆலய நிர்வாக சபையினரால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.
தொடர்பு:
ஆலய நிர்வாக சபையினர். (57642)

## குமாரபுரம் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவ விசேட தினங்கள்



### மெய்யடியார்களே!

- நிகழும் விய வருடம் தை மாதம் (01.02.2007) வியாழக்கிழமை தைப்பூசத்திருவிழா காலை 10.30 மணியளவில் நடைபெறும்.
- மகா சிவராத்திரி உற்சவம் மாசிமாதம் 04ஆம் நாள் (16.02.2007) வெள்ளிக்கிழமை மாலை 6 மணி
- வருடாந்த ஆலய கும்பாபிஷேக தினமும் சங்காபிஷேகமும் பங்குனி 07ஆம் நாள் (21.03.2007) புதன்கிழமை காலை 7 மணிக்கு சங்குப்பூஜையும் 8 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சண்முக அர்ச்சனையும் நடைபெறும். பகல் 11 மணியளவில் எம் பெருமான் வீதியுலா வருவார். விஷேட தவில் கச்சேரியும் இடம்பெறும்.
- புதுவருடப் பிறப்பு உற்சவம் சித்திரை முதலாம் நாள் (14.04.2007) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு.

ஆலய உரிமையாளர்
வ.சுந்தரமூர்த்தி ஐயர்
செல்வச்சந்தி,
தொண்டைமானாறு.

(57641)

## எம்மை விட்டுப்பிரிந்த ஆசிரியையின் 31ஆவது நினைவு தினம்

**நடராஜா கலைவாணி**



நாள்கள் முப்பத்தொன்றல்ல
பல்லாயிரம் ஆனாலும்
உமது கல்விச்சுடர்- உமது
மாணவச் செல்வங்களால் - என்றும்
ஒளி வீசிக் கொண்டே இருக்கும்.

எமது சக ஆசிரியை செல்வி கலைவாணி நடராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய கொழும்பு முஸ்லிம் பாத்திமா மகளிர் கல்லூரி கல்விச் சமூகம் ஆகிய நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

முஸ்லிம் பாத்திமா மகளிர் கல்லூரி,
கொழும்பு 12.
(57603)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**வெற்றிவடிவேல் இராஜலக்சுமி**



தோற்றம் 09-02-1958 மறைவு 10-02-2006
திதி: திரயோதசி

எங்கள் இதயத்தில் இறவாமல்
எங்கள் இல்லத்தில் இறையாகி
எம்மை வழிநடத்தும் தாயே!
உம்மைத் துதித்திருப்போம் யாமே.

*மதவடி,*
*வல்வெட்டித்துறை.* (57497)
என்றும் உம்நினைவாக
துணைவர், பிள்ளைகள்.

## நெஞ்சைவிட்டகலாத பன்னீராண்டு நினைவுத்துளிகள்



அமரர்
**ஏரம்பு சோதிலிங்கம்**
(மண்டைதீவு 8ஆம் வட்டாரம்)
திதி : சதுர்த்தசி 31.01.2007

அன்பின் சிகரமே ஆற்றலின் உறைவிடமே
வீரத்தின் விளை நிலமே அழகின் கோபுரமே
குலக்கொழுந்தே புகழ் பூத்த உத்தமனே
கண்ணாக எமை வளர்த்து ஆளாக்கிய எந்தையே
பன்னீராண்டென்ன பலநூறு ஆண்டானாலும்
ஆறுமோ எம்துயர் மாறுமோ உம் நினைவுகள்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மண்ணில் 05.04.1926
விண்ணில் 15.01.1995

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
சகோதரி, மைத்துனர்.
(57628)

## 45ஆம் நாள் நினைவு அலைகள்

பிறப்பு 20 . 05 . 1974



இறப்பு 19 - 12 - 2006

**அந்தோனிப்பிள்ளை பிரபாகரன்**

19.12.2006 இல் அகாலமரணமடைந்த அன்பான குடும்பத்தலைவரின் மரணச்செய்தி அறிந்து தந்தி, தொலைபேசி வாயிலாக அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு 02.02.2007 வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும் கலந்துகொண்டு அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வில் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:
*ஆதிகோயிலடி,*
*வல்வெட்டித்துறை.* (57607)
அந்தோனிப்பிள்ளை (அன்ரன்) குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28 - 02 - 1966



மறைவு 01 - 01 - 2007


**செல்வி கலைவாணி நடராஜா**
(ஆசிரியை)

ஆறாவேதனையில் எம்மை ஆழ்த்திவிட்டு நீ
அமைதியாய் துயில் கொண்டு நாள்கள் முப்பத்தொன்று
ஆனபோதும் எம் உள்ளங்களை உந்தன்
அன்பும் பாசமும் ஆறாத கவலையாய் வாட்டுகின்றது.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளும் மதியபோசனமும் இன்று(31.01.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நீர்வேலி வடக்கு.* (57604) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 01.01.2007
திங்கட்கிழமை காலஞ்சென்ற
எமது குடும்பத்தலைவர்
அமரர்
**நடராசா சிதம்பரநாதன்**

தோற்றம் 11.03.1940 மறைவு 01.01.2007

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று(31.01.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*9/3, வெள்ளாந்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (57573) - குடும்பத்தினர்.


## COMPUTER EXPRESS

Head Office : No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd).
Branch : No 167, Kasthuriyar Road, Jaffna
Tel : 021 222 8250, 0777 222422

80% off

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Batch I : 02/02/2007, Batch II : 03/02/2007
Batch III : 04/02/2007, Batch IV: 07/02/2007

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
◆ Assembling ◆ Upgrading ◆ Troubleshooting ◆ Fault Finding ◆ Repairing ◆ Servicing ◆ Software Installation ◆ Configuring ◆ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software கணினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
◆ Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Adobe Premier ◆ Cool3D Studio ◆ Pinnacle Studio ◆ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
◆ Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Corel Draw ◆ Cool3D Studio ◆ Macro media Flash MX
Course Fee :2000/=

... 05/02/2007 - 08.30 AM

3 மாதகால
Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 03/02/2007 , 04/02/2007 ம் திகதியில் ஆரம்பமாகின்றது.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ... வதிவிடமாகவும் கொண்ட
கொக்குவிலை வசிப்பிடமாகவும் ...
**அமரர் கந்தையா தம்பிராசா**
(பிரபல வர்த்தகர்)

மண்ணில் 12.09.1940 விண்ணில் 01.01.2007

"நிழலின் அருமை வெயிலில் அன்றோ"
உங்கள் வெற்றிடம் நிரப்ப இனியொருவர் இல்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய் கண்ணகி அம்மன்
அருளை வேண்டுகின்றோம்.

01.01.2007 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிரியைகள் இன்று (31.01.2007) புதன்கிழமை 10மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் அனைவரையும் அழைப்பதோடு அன்னாரது மறைவின்போது துயருற்று எம்மைத்தேடி வந்து ஆறுதல் கூறியவர்கள், உதவிகளைப் புரிந்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளின் போது சமுகமளித்த அன்புள்ளங்களுக்கும் உள்ளூரிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*புகையிரத வீதி,*
*கொக்குவில்.* (57629)
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## சர்வதேச சமூகத்தின் அவசரமும் அசிரத்தையும்

நேற்றும் முன்தினம் காலியில் நடந்துமுடிந்த இலங்கை அபிவிருத்தி மாநாட்டின் பெறுபேறு எப்படியாக அமைந்தாலும் ஒரு விடயம் தெளிவாகப் புலப்பட்டது. சர்வதேச சமூகத்தின் ஒரே கருத்தாக அது அங்கு ஒலித்தது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமே இல்லை. நாட்டை அபிவிருத்தி செய்வதென்றால் - வீழ்ந்துகிடக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதென்றால் எப்படியும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியேயாகவேண்டும். அதற்கு அமைதி வழித் தீர்வே ஒரே மார்க்கம். எனவே, இனப்பிரச்சினைக்கு முடிவுகட்ட அரசுத் தலைமை விரைந்து செயற்படவேண்டும். - இதுவே சர்வதேச சமூகத்தின் ஒருமித்த கருத்தாகக் காலியில் எதிரொலித்தது.

ஆனால், அதனை உள்வாங்கி - செவிமடுத்து - கவனத்தில் கொள்ளும் சிரத்தை - இராணுவ நடவடிக்கை முனைப்பில் தீவிரமாக இருக்கும் அரசுத் தலைமைக்கு - உள்ளதாகத் தென்படவில்லை.

காலியில் சர்வதேச சமூகம் வலியுறுத்திய மேற்படி கருத்து 'புறக்குடத்து நீராக', 'எருமையில் பெய்த மழையாக' அவமே போகும் என்பது உறுதி.

யதார்த்தக் கள நிலைமையை சர்வதேச சமூகம் தெளிவாக எடுத்துரைத்துள்ள போதிலும் அதை ஒரு காதால் வேண்டி, மறுகாதால் வெளித்தள்ளிவிடும் உதாசீனப் போக்கிலேயே அரசுத் தலைமை உள்ளது என்பதும் திண்ணம்.

இலங்கைத் தீவில் காலத்திற்குக்காலம் ஆட்சிப் பீடம் ஏறிய சிங்கள அரசுகள் இனப்பிரச்சினை விவகாரத்தை சமரச நோக்கோடு அணுகாமல் - பேரினவாதத் திமிரோடும், அதிகார ஆணவத்தோடும், ஆட்சிச் செருக்கோடும், மேலாண்மை மமதையோடுமே அணுகின. அதனால்தான் இப்பிரச்சினை தீர்க்கப்படமுடியாமல் இழுபடும் நிலைமை உருவானதோடு இச்சிக்கல் பெரும் இனப்போராகவும் வெடித்தது.

அந்த முன்னைய சிங்களத் தலைமைகளிலிருந்து வேறானதல்ல தற்போதைய தலைமை, அவற்றை விடவும் தமிழர் விரோதப் போக்கில் முனைப்பானதும் தீவிரமானதும் இத்தலைமை என்பதை அது நிரூபித்து வருகின்றது.

இந்நிலைமையில் இராணுவத் தீர்வு முனைப்பில் முன்முரமாக இருக்கும் தென்னிலங்கை அரசுத் தலைமையை சர்வதேச சமூகத்தின் வழமையான நல்லுபதேசங்களும், கண்டன அறிக்கைகளும், கவலை தெரிவிப்புகளும் நல்வழிப்படுத்தமாட்டா. அதற்கு அவை போதுமானவையல்ல என்பதை ஏற்கனவே இப்பத்தியில் தெளிவாகவும், விளக்கமாகவும் சுட்டிக் காட்டிவிட்டோம்.

அதைப் புரிந்துகொள்ளாமல் இலங்கை அரசு விவகாரத்தில் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் மென்போக்கைக் கடைப்பிடித்து, ஆக்கபூர்வமாக எதையும் சாதிக்காமல் தவறப்போகிறது என்பதும் தமிழர்களைப் பொறுத்தவரை மிகத் தெளிவான விவகாரம்.

சர்வதேச சமூகத்தின் கண்களுக்கு இன்னும் சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தை ஒன்றுபட்டு இணக்கத்தோடு அணுகுவது என்று இணங்கி, தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் அப்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் லியம் பொக்ஸ் முன்னிலையில் உடன்பாட்டில் ஒப்பமிட்டனர். அந்த 'லியம் பொக்ஸ் உடன்பாட்டை' சர்வதேச சமூகம் ஆரவாரமாக வரவேற்றது. ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. அது குப்பைக்கூடைக்குள் போனதுதான் மிச்சம். பின்னர் சமரச முயற்சியில் ஈடுபடும் அனுசரணைத் தரப்பாக நோர்வே முன்வந்தது. யுத்த நிறுத்த உடன்பாடு ஒப்பமிடப்பட்டது. ரணிலின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆறு சுற்று அமைதிப் பேச்சுகள் நடந்தன. பல முடிவுகள் எட்டப்பட்டன.

எல்லாவற்றையும் சர்வதேச சமூகம் ஒரே குரலில் வரவேற்றது. ஆனால், பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவையும் குப்பைக்கூடைக்குள் போயின. சர்வதேச சமூகம் வெகுவாகப் பாராட்டிய யுத்தநிறுத்த உடன்பாடும் வெறும் உக்கிய காகிதத் தாளாக மாறிக்கொண்டிருக்கின்றது.

இரண்டு ஆண்டுக்ளுக்கு முன்னர் ஆழிப்பேரலை தாக்கியது. அந்தப் பேரவல அனர்த்தத்திலிருந்து மக்களை மீள் வாழ்க்கைக்கு வழிப்படுத்துவதற்காக - அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்காக - சர்வதேச பங்களிப்போடு ஒரு பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதையும் சர்வதேச சமூகம் பெரிதாக வரவேற்றது. ஆனால் சட்ட வழியில் அதற்குத் தடுக்குப்போட பொதுக்கட்டமைப்பும் தகர்ந்து போனது.

இந்த அரசுடன் ஜெனிவாவில் புலிகள் நடத்திய இரண்டு சுற்றுப் பேச்சுகளைக்கூட சர்வதேச சமூகம் வரவேற்றது. ஆனால், அந்தப் பேச்சுக்களும் பலனின்றி முடிந்தன.

பின்னர், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இணைந்து - ஒன்றுபட்டு ஈடுபடுவதற்கு இலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகளான ஸ்ரீல. சு.கவும் ஐ.தே.கவும் முன்வந்தன. புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானது. சர்வதேச சமூகம் அதையும் பெரும் திருப்பமாகக் கொண்டாடி வரவேற்றது.

குறுகிய அரசியல் லாபத்துக்காக அந்த உடன்படிக்கையையும் குறுகிய காலத்துக்குள் செல்லக்காசாக்கி, கிழித்தெறிய வைத்திருக்கின்றார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

இப்பேது குத்துக்கரண அரசியலை - குதிரையோட்ட பேரத்தை - ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, வழிப்படுத்தி அதன்மூலம் தமது அரசின் நாடாளுமன்றப் பலத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கின்றார் அவர். அப்படி அவர் தமது அரசின் நாடாளுமன்ற வலுவை ஸ்திரப்படுத்தியமையையும் சர்வதேச சமூகத்தின் சார்பில் காலி மாநாட்டில் வைத்து விதந்துரைத்து வரவேற்றிருக்கின்றார் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர்.

இவ்வாறு சர்வதேச சமூகம், அமைதி முயற்சிகள் தொடர்பாகப் பாராட்டி வரவேற்ற அம்சங்கள் ஏதும் நிஜத்தில் பலன்தரவேயில்லை என்பதுதான் நிலைமை.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இரண்டு தரப்புகள். ஒன்று இலங்கை அரசு. மறுதரப்பில் தமிழர்கள் சார்பில் விடுதலைப் புலிகள்.

இந்த இரு தரப்பையும் வேறுபா[illegible] ணில் வெண்ணெ[illegible]டி, 'ஒரு கண்[illegible], மறுகண்ணில் சுண்ணாம்பு' என்ற பாணியில் சர்வதேச சமூகம் விடயங்களை அணுகியமைதான் இந்த அவல நிலைக்கு அடிப்படைக்காரணம்.

ஈழத் தமிழரின் நியாயமான அபிலாஷைகளை - சுதந்திரமும், கௌரவமுமுடைய வாழ்வை - பிறப்புரிமையை - எட்டுவதற்காக அவர்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்து முத்திரை குத்துவதில் சர்வதேச சமூகம் காட்டிய அவசரமும் -

சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகளைப் பிரதிபலக்கும் கொழும்பு அரசின் தமிழ் இனவிரோதப் போக்கை - அடக்கு முறையை - கண்டிப்பதில் கூட சர்வதேச சமூகம் காட்டிய அசிரத்தையுமே இந்தப் பிரச்சினை இவ்வாறு சீர்கெட முக்கிய காரணம் என்பது மறுக்கப்பட முடியாதது.

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியேற விரும்புவோருக்கான நேர்முக விசாரணை 2ஆம் திகதி முதல்

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேற விரும்பும் குடும்பங்களுக்கான நேர்முக விசாரணைகள் எதிர்வரும் இரண்டாம் திகதி ஆரம்பமாகின்றன.

தெல்லிப்பளை பிரதேச செயலர் அலுவலகத்தில் இரண்டாம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையும் -

கரவெட்டி பிரதேச செயலர் அலுவலகத்தில் ஐந்தாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரையும் இந்த விசாரணைகள் நடைபெறும் என்று மேற்குறிப்பிட்ட பிரதேசங்களின் செயலர்கள் அறிவித்துள்ள னர்.

**தெல்லிப்பளையில்**

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற விரும்பும் குடும்பங்களது விசாரணைகள் நாளை மறுதினம் முதல் தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் திகதியன்று - ஜே/ 219, ஜே/ 227, 5ஆம் திகதியன்று - ஜே/ 222, ஜே/221, 6ஆம் திகதியன்று - ஜே/ 212, ஜே/ 215, 8ஆம் திகதியன்று - ஜே/ 224, ஜே/ 229, 9ஆம் திகதியன்று - ஜே/ 220, ஜே/ 216, 12ஆம் திகதியன்று - ஜே/ 217, ஜே/218, 13ஆம் திகதியன்று - ஜே/ 239, ஜே/ 244 ஆகிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களதும் விசாரணைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

**கரவெட்டியில்**

5ஆம் திகதியன்று - ஜே/ 348, ஜே/ 350, ஜே/ 351, ஜே/ 354, ஜே/ 356, ஜே/ 358 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களினதும் - 6ஆம் திகதியன்று -ஜே/362, ஜே/ 364, ஜே/ 366, ஜே/367, ஜே/ 368, ஜே/ 369, ஜே/ 372, ஜே/ 374 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களதும் -

8ஆம் திகதியன்று - ஜே/ 375, ஜே/376, ஜே/377, ஜே/ 379, ஜே/ 382, ஜே/ 360, ஜே/ 370, ஜே/ 381, ஜே/ 359 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களதும் -

9ஆம் திகதியன்று - ஜே/373, ஜே/355, ஜே/ 371, ஜே/ 380, ஜே/ 353 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## நகரப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதி மக்களுக்கும் உணவுப் பொருள் விநியோகம்

### விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்திணைக்களத்தினால்

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்தியாவசியப் பொருள் விநியோகம் தொடர்பாகப் புதிய நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சமாசத்தில் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லைக்குட்பட்ட மக்களுக்கான பொருள் விநியோகம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஏனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த மக்களும் சமாசத்தால் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தினங்களில் அந்தந்தக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 150 பேருக்கு மட்டுமே பொருள் விநியோகம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிடப்படும் தினங்களில் பின்வரும் ப.நோ.கூ. சங்கங்களைச் சேர்ந்த மக்களுக்கு பொருள்கள் விநியோகிக்கப்படும்.

- ✱ எதிர்வரும் 5ஆம் திகதி - உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்.
- ✱ 6ஆம் திகதி - சங்கானை ப.நோ.கூ. சங்கம்.
- ✱ 7ஆம் திகதி - மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்.
- ✱ 8ஆம் திகதி - சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்.
- ✱ 9ஆம் திகதி - பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்
- ✱ 10ஆம் திகதி - அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்.
- ✱ 11 ஆம் திகதி - அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம். (அ-8)

## நந்தாவில் பகுதியில் மூன்று வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.31

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயில் வீதியில் நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில், ஒரே நேரத்தில் 3 வீடுகளில் திருட்டுகள் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் பத்திற்கும் மேற்பட்டோர் பொல்லுகள் மற்றும் வாள்களுடன் வீடுகளுக்குள் நுழைந்து அங்கிருந்தோரை மிரட்டி பெருந்தொகையான நகைகள், பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர். வேறு சில வீடுகளில் வீட்டுக்காரர் விழிப்பாக செயற்பட்டதால் திருட்டு முயற்சி பலிக்கவில்லை என்று கூறப்பட்டது. (அ-202-69)

## சட்டவிரோத மது விற்பனை 18 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.31

சட்ட விரோத சாராயம் விற்பனை செய்தமை மற்றும் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18 பேர் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு மொத்தமாக ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதிவான் இ.த. விக்னராஜாவால் விதிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் மது வரித் திணைக்கள அதிகாரிகளால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## கோயில்களுக்கு இலவசமாக கற்பூரம், தே.எண்ணெய்

யாழ்ப்பாணம், ஜன.31

தைப்பூச தினத்தை முன்னிட்டு குடாநாட்டில் உள்ள கோயில்களுக்கு கற் பூரம் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் சமூகத்தின் அனுசரணையுடன் இப்பொருள்கள் இந்துசமயப் பேரவை அலுவலகத்தில் (காலை 9மணி) தொடக்கம் வழங்கப்படும்.

இந்து சமயப் பேரவையின் அலுவலகம், 141, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது.

ஆலய உரிமையாளர்களின் கடிதத் தலைப்புகள், தர்மகர்த்தா சபையின் கடிதத் தலைப்புகளில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தால் மட்டுமே மேற்படி பொருள்கள் வழங்கப்படும். கடிதத் தலைப்புகள் இல்லாத ஆலயங்களின் விண்ணப்பத்தை அந்தப் பகுதி கிராம சேவையாளர் அத்தாட்சிப்படுத்தி இருக்கவேண்டும்.

வர்த்தக சமூகத்தின் முயற்சியால் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான இப்பொருள்கள் அரசாங்க அதிபருடாக தருவிக்கப் பட்டது. (அ)

## சாதாரண பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி பிற்போடப்பட்டது

யாழ். மத்திய கல்லூரியில் நாளைமுதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த ஜி.சீ.ஈ. சாதாரண விடைத்தாள் 2 ஆம் கட்ட மதிப்பீட்டுப்பணிகள் மறு அறிவித்தலை வரை ஒத்திவைக்கப்பட்டன.

விடைத்தாள் பொதிகளை இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருவதில் உண்டான எதிர்பாராத தடைகளால் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் ஒத்திவைக்கப்படுவதாக உதவிப் பரீட்சை ஆணையாளர் அ.சொலமன் உதயனுக்குத் தெரிவித்தார். (1-11)

## சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயனுள்ள - அதிகாரப் பரவலாக்கல் யோசனைத் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை வகையாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!" - என்று இலங்கை அரசைக் கோரினார்.

உலக வங்கியின் தெற்காசியப் பிரிவின் உபதலைவர் பிரவுல் பட்டேலும் இதே போன்ற கருத்தை முன்மொழிந்தார்.

"இலங்கையின் அபிவிருத்தியின் பிரதான பங்காளியாக உள்ள உலக வங்கி, எங்களின் இந்தப் பேச்சுக்களில் இந்த இனப்பிணக்கு விவகாரத்தை முன்னிறுத்தி ஆராயாமல் விட்டால் நாம் தவறிழைத்தவர்களாவோம்'' - என்றார்.

இலங்கைக்கு உதவும் நாடுகளில் முன்னணியில் இருக்கும் ஜப்பானும் பேச்சு மூலம் நிலையான சமாதானத்தை ஏற்படுத் துவதே ஒரேவழி என்பதினைக் காலிக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறு இலங்கைக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தேசங்களின் பிரதிநிதிகள் அமைதித்தீர்வு, சமாதான முயற்சி போன்றவற்றை நிபந்தனையாக முன்வைத்துக் கருத்துக் கூறியுள்ள போதி லும் அதனைச் செவிமடுக்கும் - உள்வாங்கிச் செயற்படும் - போக்கில் இலங்கை அரசுத் தலைமை இல்லை என காலி மாநாட்டின் நடப்புகளை கவனத்தில் கொண்டுள்[illegible] அரசியல் அவதானி[illegible] சுட்டிக்காட்டுகின்றனர்.

அமைதி முயற்சிகளையும், நிதி மற்றும் உதவிகள் வழங்குதலையும் உதவும் நாடுகள் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும் என இலங்கை அதிகாரிகள் அடம்பிடிக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

''அமைதி முயற்சிகளோடு தொடர்பு படுத்தப்படும் எந்த நிபந்தனையையும் நாம் ஏற்கமாட்டோம். இது உதவிகள் தொடர் பாக உறுதியளிக்கும் மாநாடல்ல. எனினும் எமது பத்துவருட அபிவிருத்தி தந்திரோபாயம் குறித்து இந்த மாநாட்டில் தங்கள் கருத்துகளை உதவும் நாடுகள் எம்மோடு பகிர்ந்துகொள்ளமுடியும்'' - என்றார் இலங்கை மத்திய வங்கியின் ஆ[illegible]நர் நிவார்ட் கப்ரால்.

"அதிகாரப் பகிர்வு தொடர்பான வலிமை யான உடன்பாட்டுக்கு வாருங்கள் என்று இலங்கைக்கு பெரியளவில் உதவும் நாடு கள் வலியுறுத்திக் கேட்டபோதிலும் இலங்கை அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.'' - என முக்கிய உதவும் அமைப்பு ஒன்றின் பிரதிநிதி காலியில் தெரி வித்தார்.

"யுத்தம் தீவிரப் போக்கில் உள்ள அர சுக்கு உதவும் நாடுகள் தவறாது உதவியளித்து ஒத்தாசை புரியவேண்டும் என்ற பாணியிலேயே இலங்கை அரசின் நிலைப்பாடு காலி மாநாட்டில் காணப்பட்டது" - என்று அங்கிருந்து கருத்து வெளியிட்டார் பிரபல அரசியல் - பொருளாதார விமர்சகர் ஒருவர்.

### நாளை

தை - 18
வியாழக்கிழமை
01.02.2007
திதி: சதுர்த்தி
பிற்பகல் : 11.36
நட்சத்திரம் : புனர்பூஷம்
காலை: 06.33 வரை
தைப்பூசம்
சுபநேரம் : 08.06 - 09.36
ராகுகாலம் : 02.06 - 03.36

## படுகொலைகள்

**நாயன்மார்கட்டில்**

யாழ்ப்பாணம், ஜன.31

நாயன்மார்க்கட்டு பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவத்தில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் ஒருவர் பலியானார்.

இனந்தெரியாதவார்களின் சூட்டுக்கு இலக்காகி கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த முத்துப்பிள்ளை பீற்றர் (வயது 29) என் பவரே பலியானவர் ஆவார்.

குறிப்பிட்ட நபர் தனது சொந்த ஊரான நாவற்குழிக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா மரண விசாரணைகளை மேற்கொண்டார். (1-78-79-202)

**கரவெட்டியில்**

யாழ்ப்பாணம், ஜன.31

கரவெட்டி இராஜ. கிராமத்தில் நேற்றுமாலை 3.30 மணியளவில் வலதுகுறைந்த நபர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியா வேப்பங்குளத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான இராமையா தம்மசீலன் (வயது 32) என்பவரே கொல்லப்பட்டவராவார். கரவெட்டியில் உள்ள அவரது சகோதரர் வீட்டில் தங்கியிருந்த சமயம் சுடப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-155)

**ஆறுகால்மடத்தில்**

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். ஆறுகால்மடம், கோம்பயன் மணல் மயானத்துக்குச் சமீபமாக வெட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல் காணாமற்போன சுதுமலை மேற்கு, மானிப்பாயைச் சேர்ந்த குணரத்தினம் கஜேந்திரன் (வயது 30) என்பவரின் சடலம் அதுவென்று இனங்காணப்பட்டுள்ளது.

யாழ். நகரில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் இவர் கடந்த வியாழக்கிழமை கடமைக்குப் புறப்பட்டுச் சென்றார் என்றும் -

பின்னர் காணாமற் போயிருந்தார் என்றும் - உறவினர்கள் விசாரணையில் தெரிவித்தனர்.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார். (அ-1-78)

## நேர்முகப் பரீட்சை வெள்ளியன்று

யாழ்ப்பாணம், ஜன.31

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய பணிமனையில் நடைபெறும் என்று வலயப் பணிப்பாளர் வ.தி. செல்வரெத்தினம் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை நடைபெறவிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-4-88)

## நால்வரைக்காணவில்லை

குடாநாட்டில் நான்கு இளைஞர்கள் காணாமற் போயுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி பிரபாகர் (வயது - 24), தாவடியைச் சேர்ந்த செல்வரா[illegible] கஜேந்திரன் (வயது -29), இணுவில் [illegible]றகைச் சேர்ந்த ஆர்.ரஜீவன் (வயது - 17), ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தம்பிராசா தமயந்தன் (வயது - 24) ஆகியோர் தொடர்பாக ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (1-4)

## பல்கலை. ஊழியர் கொலை; சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.பல்கலைக்கழக சுகாதார நிலையத்தில் பணிபுரியும் முத்தையா பீற்றர் என்பவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இப்படுகொலை பல்கலைக்கழக கற்கைச் செயற்பாட்டை மீள ஆரம்பிக்கும் முயற்சிகளுக்கு ஏற்பட்ட மற்றொரு பின்னடைவாகும் - என்று சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் - கோட்டை
## அருள்மிகு முனீஸ்வரர் தேவஸ்தான
## தைப்பூசத் திருவிழா - 2007

**முனீஸ்வர மெய்யடியார்களே!**

நிகழும் விய வருஷம் தை மாதம் வியாழக்கிழமை 18ஆம் நாள் (01.02.2007) முற்பகல் 11மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகும்.

அதனைத்தொடர்ந்து நண்பகல் 12மணிக்கு விஷேட பூஜை நடைபெற்று, தொடர்ந்து மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும். அனைத்து அடியார்களையும் கலந்துகொண்டு கோட்டை முனீஸ்வரரின் அருளைப்பெற்று ஏகுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம். (57651) யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகரும், உத்தியோகத்தர்களும்.

ஓம் விராட்விஸ்வப் பிரமனே நமக

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

இல. 172A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## கஜமுகன் நகைப் பூங்கா

என்னும் புதிய கடையை நாளை (01.02.2007) வியாழக்கிழமை காலை 8-9.30 மணிவரை வரும் சுபவேளையில் திறக்கவுள்ளேன். அத்தருணம் எமது நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துசிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

T.P.: 0776 914075. உரிமையாளர்: K. குணதீபன்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்

மலர்வு 08 - 01 - 1980  உதிர்வு 23 - 01 - 2005

இராமச்சந்திரன் தர்ஷினி
திதி: 31.01.2007

மலர்வு 22 - 11 - 1917  உதிர்வு 05 - 03 - 2005

திருமதி சிவபாதசுந்தரம் பர்வதம்
திதி: 12.02.2007

அன்பின் திருவுருவே எம்மை மீளத்துயரில்
ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்களோ
உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்

மின்சார நிலைய வீதி, சுன்னாகம். (57652) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 01.01.2007 அன்று சிவபதமடைந்த எனது அண்ணா



### அமரர் கந்தர் செல்லத்துரை

அவர்களின் மரணச் செய்தி அறிந்து எனக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றி தெரிவித்து எனது வீட்டில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

டச்சு றோட், உடுவில். (57616) சகோதரி-தம்பையா பவளம்.

## எம்மைவிட்டகலாத ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லத்துரை இரத்தினராசா

*(MANAGING DIRECTOR, RATNA GROUPS AND COMPANY)*


தாயின் மடியில் 24★04★1942 இறைவன் அடியில் 12★02★2006

திதி: 31.01.2007

எங்களை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து எம்மை நல்வழிப்படுத்திய எங்கள் தெய்வமே! எங்களின் ஆத்மாவே எங்கு சென்றீர்? ஏன் எங்களைப் பிரிய மனம் வந்தது? எங்களுக்காவே வாழ்ந்த எங்களின் தந்தையே தங்களை வருத்தி எங்களை உயர்த்தியவரே உங்கள் திருமுகம் எப்போது காண்போம்? இறப்பு என்பது எவ்வளவு கொடிது என்பதனை எங்களுக்குக் கற்பித்துவிட்டுச் சென்றுவிட்டீர்களே. தந்தையாய், சகோதரனாய், நண்பனாய் இறுதிவரை எங்களோடு இருந்துவிட்டு எங்களுக்கு பேரிழப்பைத் தந்துவிட்டு அவசரமாய் ஏன் சென்றீர்கள்? நாம் எவ்வாறு எங்கள் மனதைத் தேற்றுவது? பல ஆண்டுகள் சென்றாலும் என்றும் உங்கள் உன்னை இலட்சியத்துடன் உங்களுடன் வாழ்வதாகவே நினைத்து உங்கள் ஆத்மாசாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (57634)
தொ.பே.இல.: 222 6301, 222 9513, 0115688805 - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி சிவநாயகி சுந்தரலிங்கம்

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 64*, புங்கன்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் சிவநாயகி 30.01.2007 இல் காலமானார்.

அன்னார் கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற குருசாமி சுந்தரம்மாவின் மகளும் மண்கும்பானைச் சேர்ந்த பொன்னுத்துரை சுந்தரலிங்கத்தின் (கிளி) மனைவியும் அமரர் பொன்னுத்துரை நாகம்மாவின் மருமகளும் தில்லைநாயகி (லண்டன்), தவநாயகி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), சோதிநாயகி, நயனி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் கந்தசாமி (லண்டன்), அமரர் சிவபாலன், ஜெகதீசன் (பிரான்ஸ்), லட்சுமிகுணநாயகம், அமரர் துரைசிங்கம், செல்வராசா (பிரான்ஸ்), ராணி அமரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் லலிதசொரூபினி, சொரூபன், கபில சொரூபன் (லண்டன்), சுகன்னியா, சிவஞ்சலி, சாரங்கி, சாரமன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரியதாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

71/27 புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். தகவல்: பொ.சுந்தரலிங்கம் (கணவர்),
தொ.பே.: 021 4591275 சி.தவநாயகி (சகோதரி).

நாளை ஆரம்பம்

**வின்னா கல்வி நிறுவனம்**

தலைமையகம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
பிரிவு I
O/L DAY CLASS
(8.30-2 மணி)
ஆரம்பம்:
01.02.2007 8.30 மணி
★ பாடசாலை செல்லாத பரீட்சையில் தோற்றாத மாணவர்களுக்கான பிரிவு
★ அனுமதிகளை பெறாதவர்கள் நாளை 8.30 மணிக்கு பெற்றுக்கொள்ளவும்.

**சிங்களம்**

அரச உத்தியோகத்தர்களும் பாடசாலை விட்டவர்களும் பேச, எழுத, வாசிக்கப் பழக்கும் வகுப்புகள்
சனி, ஞாயிறு நண்பகல் 12 மணி
ஆரம்பம்: 03.02.2007 சனிக்கிழமை
பதிவு 25.01.2007 தொடக்கம் 02.02.2007வரை
K.Thurairaja SLAS, Retd. Addl. Govt. Agent.

**கற்சுமி கல்வி நிறுவனம்**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

**A/L 2007, 2008, 2009** வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய சக்தி கல்வி நிலையம் கல்வியங்காடு
பொருளியல் - G.பிரதீபன் (B.B.A.)
A/L 2008 பேரினப்பொருளாதாரம்
ஆரம்பம்: 02.02.2007 வெள்ளி 5 மணி
A/L2007 ஆரம்பத்திலிருந்து அலகு ரீதியான மீட்டல் வகுப்பு 05.02.2007, 5 மணி
கல்வியே உங்கள் கண் அதைத் தருவதே புதிய சக்தி

## பெயர் மாற்றம்

360, உக்குளாங்குளம், வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பூபாலசிங்கம் சுதர்சன் ஆகிய நான் 30.01.2007 முதல் பூபாலசிங்கம் சுதாகர் என பெயர் மாற்றியதுடன், எனது சகல ஆவணங்களிலும் இன்று முதல் சுதாகர் என்ற பெயரையே பயன்படுத்துவேன் என்பதினை அறியத்தருகிறேன். (சி.51949)

**ENGLISH**
Spoken Grammar & GAQ & B.A.1 Classes
By: A.BRITTO
ஆரம்பம் - 03.02.2007
நேரம் மதியம் 12 மணி
**SINHALA CLASSES**
Spoken Sinhala & G.C.E. O/L
By: Leela Krishnan
ஆரம்பம் - 03.02.2007
நேரம் 11 மணி
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.
(சி.51946)

**றப்பிட் றிசல்ற் கல்லூரி**
கச்சாய் வீதி, சாவகச்சேரி
(அதே வீதியில் மீண்டும் பொலிவுடன்)
2009ஆம் ஆண்டுக்கான G.C.E A/L கலை வகுப்புகள்
ஆரம்பம்: நாளை (01.02.2007) வியாழக்கிழமை 3 மணிக்கு
தமிழ்: ஆசிரியர் திரு.க.தர்மராஜா
அனுமதிக்கு முந்துங்கள்.
இயக்குநர் திரு.அ.வாசுதேவா

**சுனாமி ஊழல் மோசடி தொடர்பில் எமக்கு தெரிவியுங்கள்!**
சுனாமியிலிருந்து மீளும் செயல்முறையில்
இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் ஆதாரத்துடன்
கூடிய தகவல்கள் உங்களிடமிருப்பின்....
எமக்குத் தெரிவியுங்கள்.
உங்கள் தகவல்கள் இரகசியமாக
பேணப்படும் அதேவேளை இடம்பெற்ற ஊழலினை
வெளிப்படுத்த நாங்கள் தயார்!
தொடர்பு
ஹொட்லைன்: 011 5627432
அல்லது எமக்கு எழுதுங்கள்
ட்ரான்ஸ்பேரன்சி இன்டநஷனல் ஸ்ரீலங்கா
28/1, புள்ளர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 07
தொலைபேசி 0112592287
மின்னஞ்சல் - voicecorruption@tisrilanka.org

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை சீவரெத்தினம்

(சீவரெத்தினம் பேக்கரி, வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சீவரெத்தினம் 29.01.2007 இல் கொழும்பில் காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீவரெத்தினம் பேக்கரி, வல்வெட்டித்துறை.
021 226 3156
கொழும்பு-0776128785 (57645)
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி பூபாலசிங்கம் தங்கரத்தினம்

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் வசிப்பிமாகவும் கொண்ட பூபாலசிங்கம் தங்கரத்தினம் 29.01.2007 கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பூபாலசிங்கத்தின் மனைவியும் வல்லிபுரம் - சின்னப்பிள்ளையின் மருமகளும் செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும் நாகலிங்கத்தின் அன்புச் சகோதரியும் தவமணி, நவமணி, கணபதிப்பிள்ளை, மகேஸ்வரி, உதயகுமார், கேமாவதி ஆகியோரின் தாயும் தில்லைநாதன், ஜீவசோதி, கார்த்திகேசு, விஜியா, ஜீவானந்தன் ஆகியோரின் மாமியும் மைதிலி - தவக்குமார், திலீபன், தயாளினி - காந்ஜீபன், கபிலன், கபில், பிரேமினி, சாமினி, செந்தூரன், ஜனனன், ஜனனி, நீரேஷன், நிராளன், நிவேதா ஆகியோரின் பேர்த்தியும் மிதுலன், நிருஷா, ஷகான், ஷகானா ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (31.01.2007) புதன்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20A, சிறியா லேன், (57655)
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
தகவல்: சி. தில்லைநாதன் (மருமகன்).

### வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை நேற்று (30.01.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற தங்கமலரின் கணவரும் சத்தியராணி (சத்தியா), குமாரதாஸ் (சுவிஸ்), விமலேந்திரன் ஆகியோரின் தந்தையும் ஸ்ரீகாந்தன், சிவநேசம் (சுவிஸ்) சிவசெந்தில்நாயகி ஆகியோரின மாமனும் நவரத்தினம், நகுலாவதி, காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் மகாராசா லீலாவதி ஆகியோரின் சகோதரரும் பாலசிங்கம், காலஞ்சென்ற நடேசபிள்ளை மற்றும் தெய்வேந்திரராசா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் சர்மிலா (சுவிஸ்), சாலினி (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு, இணுவில். (57643) தகவல்: ஸ்ரீகாந்தன் (ஸ்ரீ-மருமகன்).

### கந்தசாமி கணபதிப்பிள்ளை

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான இளைப்பாறிய யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர், வித்துவான் கந்தசாமி கணபதிப்பிள்ளை (B.A.) (வவுனியா மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர், ஞானப்பிரகாசசிவம், சித்தாந்த கலாநிதி) 29.01.2007 திங்கட்கிழமை எண்பதாவது வயதில் முத்திநிலை அடைந்தார்.

அன்னார் அமரர்களான கந்தசாமி - பார்வதி தம்பதியரின் புதல்வரும் நயினாதீவைச் சேர்ந்த அமரர்களான செ.நல்லதம்பி - சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும் தங்கலட்சுமியின் ஆருயிர்க் கணவரும் வள்ளியம்மை, இராமலிங்கம், காலஞ்சென்ற அரும்பொருள் ஆகியோரின் சகோதரரும் சிவகுமாரன் (U.K), ரஜனி (வவுனியா), சூரியகலா (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), சிவகலா (கனடா), குகஸ்ரீ (U.K) ஆகியோரின் தந்தையும் உமாஸ்ரீ (U.K), கணேசராசா (அதிபர், யா/இந்துக்கல்லூரி), நித்தியானந்தன் (மஸ்கன் கொழும்பு), தவராசா (கனடா), ரவிச்சந்திரன் (U.K) ஆகியோரின் மாமனும் லக்சிதா, லக்சாயினி, லக்சனா, லக்சன், திரிலோசனன் (பல் வைத்தியபீடம், பேராதனை), திவாகரன், விங்கேசன், அங்குஜன், பூரணி, தர்ஷிகா, கிருஷ்ணி, திவாணி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (30.01.2007) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் பொரளை ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (31.01.2007) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பொரளை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 2424765 (சி.51945) தகவல்: மனைவி, பிள்ளைகள், மகன்: சிவகுமாரன்.

### திருமதி கணேசலிங்கம் சிவமணி



நல்லூர், கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசலிங்கம் சிவமணி 29.01.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசலிங்கம் (உரிமையாளர் வெல்கம் சாறி கவுஸ்-கொழும்பு, ராஜி ஸ்ரோர்ஸ் - நல்லூர்) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற சோதிடர் சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் (அப்பாத்துரை வாத்தியார், வேலணை) - பராசக்தி தம்பதியரின் மருமகளும் கலாநிதி ஜெயக்குமார் (பொறியியலாளர், லண்டன்), கலாநிதி ராஜ்குமார் (பொறியியலாளர், லண்டன்), சிவாஜினி (B.A. லண்டன்) ஆகியோரின் தாயும் யசோதா (லண்டன்), ஞானமஞ்சரி (லண்டன்), ரமணன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பரமேஸ்வரி, சண்முகநாதன் (டென்மார்க்), தனபாலசிங்கம் (நல்லைக்குமரன் ஹார்ட்வெயர்ஸ்), யோகேஸ்வரி (சோதிடர்), சந்திரபுஸ்பராணி, சிவதர்சினி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தர்மலிங்கம், செல்வரட்ணம் (டென்மார்க்), காலஞ்சென்ற சந்திரவதனா, சூரியகுமாரன் (சுபா சென்ரர், கொக்குவில்), அருள்ராஜா (லண்டன்), காலஞ்சென்றவர்களான இசை அரசு சந்திரசேகரம், முருகேசம்பிள்ளை (ஆசிரியர்), சுகுணமதி மற்றும் காந்திமதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.02.2007 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

233/5, கோயில் வீதி, நல்லூர். (57657) தகவல்: போகா சுப்பிரமணியம் (சோதிடர் - சகோதரி).

### முத்தையா சுவேந்திரராஜா (கொக்குவில் மேற்கு)



கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சுவேந்திரராஜா 30.01.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகரத்தினம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதியரின் மருமகனும் அமரர் புஷ்பதேவியின் (குஞ்சு) கணவரும் வாசுகி (பிரான்ஸ்), வனிதா (கனடா), வத்சலா (கனடா), விஜிதா (பிரான்ஸ்), வனஜா (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் பஞ்சலிங்கம், தவராஜகுலசிங்கம், இளங்கோவன், தேவரட்ணம், அன்ரனி கலிஸ்றஸ் ஆகியோரின் மாமனும் அமரர் கனகராசா மற்றும் பத்மநாதன், குணராஜா, சுசீலாதேவி, ஜெயராஜா, பத்மாதேவி, விஜயராசா, மகேந்திரராஜா, பாலராஜா ஆகியோரின் சகோதரரும் பிரகாஸ், பிரவீனா, கஜீபன், மிலானி, பிரிஷா, விதுஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2007) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (57656) தகவல்: மகேந்திரராசா, விஜயராசா (சகோதரர்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.